மே 1, 2020

அன்பான பெற்றோர்களே/பாதுகாவலர்களே மற்றும் குடும்பத்தவர்களே,

COVID-19 பரவுவதைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஒன்ராறியோவில் அரச நிதியுதவியில் இயங்கும் அனைத்துப் பாடசாலைகளையும் மூடுதல் குறைந்தபட்சம் மே 31, 2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த மூடுதல் நீடிப்பு சவாலாகவும், விரக்திதருவதாகவும் இருக்கும் அதேவேளையில், உங்களுக்கு நன்றி கூறுவதற்கும் பெற்றோர்களையும் குடும்பத்தினரையும் கல்வியில் பங்குதாரர்களாக வைத்திருப்பதில் எவ்வளவு தூரம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம் என்பதை அங்கீகரிப்பதற்கும் இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த நேரத்தில் எதிர்கொள்ளக்கூடிய கூடுதலான பொறுப்புகளுக்கும் மேலாக, தொலைதூரக் கல்வி கற்றலில் உங்களுடைய பிள்ளைக்கு(பிள்ளைகளுக்கு) ஆதரவளிப்பதென்பது ஒரு இலகுவான பணியல்ல என்பது எங்களுக்குத் தெரியும். இந்த அனுபவம் ஒவ்வொருவருக்கும் புதியது. நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து அதனை மெதுமெதுவாகக் கற்கின்றோம். இந்தப் பணியை நாங்கள் செய்யும்போது, இந்த அசாதாரண சூழ்நிலைகளில் மாணவர்கள் முழு நேரப் பாடசாலையொன்றில் பங்குகொள்ளவேண்டுமென்றோ அல்லது ஆசிரியர்களால் வழங்கப்படும் கல்வி கற்கும் சந்தர்ப்பங்கள் சாதாரண நாளொன்றில் ஒரு நிஜ வகுப்பறையில் நடப்பதைப் போன்றதாக இருக்குமென்றோ நங்கள் எதிர்பார்க்கவில்லை என்பதை பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

குறிப்பிட்ட ஒரு வாரத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வேலை நேரத்தின் போதான எதிர்பார்ப்புகளையும் தொலைதூரக் கல்வி பற்றிய மேலதிக தகவல்களையும் கல்வி அமைச்சர் Stephen Lecce குடும்பத்தினருக்கு மிகச் சமீபத்தில் அனுப்பிய கடிதத்தில் பகிர்ந்திருந்தார். இந்த எதிர்பார்ப்புகளை பல்வேறு வழிகளில் பூர்த்தி செய்வதற்கு TDSB கல்விபயிற்றுநர்கள் உறுதிபூண்டுள்ளார்கள். எங்களுடைய தொழிற்சங்க பங்காளர்களுடன் இணைந்து, மாணவர்களுக்கு நாங்கள் திறம்பட ஆதரவு வழங்கும் பொருட்டு மாணவர்களுடன் உறவுகளைப் பேணுவதற்காக, கல்வி பயிற்றுநர்கள் இணையமூடாகக் கல்வி கற்கும்

தளங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதைக் கண்டறிவதற்குரிய வழிகளைக் கண்டறிகிறோம்.

மாணவர்களினதும் குடும்பத்தினரதும் தேவைகளையும் வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவரது தேவைகளையும் பூர்த்திசெய்யும் பொருட்டு கல்வி பயிற்றுநர்கள் அவர்களுடன் தொடர்பு கொள்வார்கள். இது வகுப்புக்கு வகுப்பு, ஆசிரியருக்கு ஆசிரியர் மற்றும் தனி மாணவர்களுக்கும் குடும்பங்களுக்கும் வித்தியாசமானதாக இருக்கும். எங்களுடைய மாணவர்கள் மற்றும் குடும்பத்தினரது பல்வேறு சூழ்நிலைகளையும் அனுபவங்களையும் நாங்கள் கருத்திற்கொண்டு அவர்களைப் பாராட்ட வேண்டும். வேறுபட்ட மட்டங்களில் கிடைக்கும் ஆதரவுடன் தனித்துவமான, வீட்டில் கல்வி கற்கும் சூழல்கள் எங்களுடைய மாணவர்களுக்கு இருக்கின்றன. அனைத்து மாணவர்களையும் நாம் தொடர்ந்து ஈடுபடுத்துவதுடன் மாணவர்கள், பணியாளார்கள் மற்றும் குடும்பத்தினரதும் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் கவனம் செலுத்துவதே இப்போது மிகவும் முக்கியமானதாகும்.

நாம் முன்னோக்கிப் பார்க்கும்போது, எதிர்வரும் நாட்களுக்கும் வாரங்களுக்கும் உங்களைத் தயார்ப்படுத்தவும் திட்டமிடவும் உதவுவதற்கென பல்வேறு விடயங்களில் மிக சமீபத்திய தகவல்களை வழங்குவோம். தயவுசெய்து ஆசிரியர்கள் மற்றும் உங்களுடைய பாடசாலைச் சமூகத்த்தினருக்கு உங்களின் தேவைகளைத் தொடர்ந்து தெரிவிப்பதுடன் ஒவ்வொருவருடனும் தொடர்பில் இருந்துகொள்ளுங்கள். நீங்கள் நலமே இருப்பதுடன் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் தயவுசெய்து கவனித்துக் கொள்ளுங்கள். நாம் இதில் ஒன்றிணைந்திருக்கின்றோம்!

- பெற்றோர்/குடும்பங்களுக்கான கற்கை அமர்வுகள்
- நல்வாழ்வு மற்றும் மாணவர் ஈடுபாடு
- மாணவருடைய சாதனை மற்றும் நல்வாழ்வுக்கு ஆதரவளித்தல், மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடுதல்
- பட்டமளிப்பு விழாக்கள், ஆண்டிறுதி நிகழ்வுகள் மற்றும் ஏனைய நிகழ்வுகள்
- நீங்கள் கூற விரும்புவதைக் கேட்டறிதல்
- கோடைகாலக் கற்கை சந்தர்ப்பங்கள்
- விசேட தொலைதூரக் கல்வி IPRC/SEPRC/IEP
- பிரெஞ்சு ஒரு இரண்டாம் மொழியாக (FSL), குடும்பங்களுக்கு ஆதாரவளங்கள்

## பெற்றோர்/குடும்பங்களுக்கான புதிய கற்கை அமர்வுகள்

தொலைதூரக் கல்வி கற்றலுக்கான இணையத் தளங்கள் சில குடும்பங்களுக்குப் புதியவை. இந்தப் புதிய கற்கைச் சூழலூடாகப் பயணிப்பதற்கு உதவும்பொருட்டு உங்களுக்கு ஆதரவளிப்பதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இந்த இரண்டு முக்கிய தளங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குவதற்கென விசேட கற்கை அமர்வுகள் இருக்கின்றன: Brightspace மற்றும் Google Classroom.

### Brightspace கற்கைத் தளத்திற்கு அறிமுகம்

இந்த அமர்வு Brightspace கற்கைத் தளத்தை அறிமுகம் செய்வதுடன்: எவ்வாறு அணுகுவது, எவ்வாறு உள்நுழைவது மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தும் சில முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டுக் காட்டுதல் ஆகியவற்றையும் உள்ளடக்கும். ஒரு அமர்வில் இணைவதற்கு, இந்த இணைய தளத்திற்கு வருகை தந்து பொருத்தமான இணைப்பை அழுத்தவும்.

- திங்கட்கிழமை, மே 4 - பி.ப. 3 மணி
- செவ்வாய்க்கிழமை, மே 5 - பி.ப. 7 மணி

### கூகுள் வகுப்பறைக்கு அறிமுகம்

இந்த அமர்வு கூகுள் வகுப்பறையை அறிமுகம் செய்வதுடன்: எவ்வாறு அணுகுவது, எவ்வாறு உள்நுழைவது மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தும் சில முக்கிய அம்சங்களைத் குறிப்பிட்டுக் காட்டுதல் ஆகியவற்றையும் உள்ளடக்கும். ஒரு அமர்வில் இணைவதற்கு, இந்த இணைய தளத்திற்கு வருகை தந்து பொருத்தமான இணைப்பை அழுத்தவும்.

- செவ்வாய்க்கிழமை, மே 5 - பி.ப. 3 மணி
- புதன்கிழமை, மே 6 - பி.ப. 7 மணி

## நல்வாழ்வு மற்றும் மாணவர் ஈடுபாடு

மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் பெற்றோர்/குடும்பத்தினர் அனைவரினதும் மனநலம் மற்றும் நல்வாழ்வை ஆதரிப்பதும் மேம்படுத்துவதும் எங்களுடைய முன்னுரிமையாகும். பாடசாலைப் பணியாளர்கள் தொலைதூரக் கல்வி வழங்கும்போது மாணவர்களுடன் உறவுகளைத் தொடர்ந்து பேணுவதுடன் அவர்களுடைய மனநலம் மற்றும் நல்வாழ்வில்

கவனம் செலுத்துவார்கள். மாணவர்களுடன் இணைந்துகொள்வதற்கும் அவர்களை ஈடுபடுத்துவதற்கும் ஆசிரியர்கள் பல்வேறு ஆக்கபூர்வமான வழிகளைப் பயன்படுத்துகின்றனர்.

## மாணவருடைய சாதனை மற்றும் நல்வாழ்வுக்கு ஆதரவளித்தல், மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடுதல்

நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து மாணவர்களை வெற்றிபெறச்செய்யும் நடைமுறைகளை நோக்கிப் பணியாற்றும்போது இது ஒவ்வொருவருக்கும் சவாலான ஒரு நேரமாக அமைகிறது. மாணவர்களுடைய கல்வி கற்றலைப் பாதிக்கும் பல ஏற்றத் தாழ்வுகள் எமது அமைப்பில் இருக்கின்றன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். தொழில்நுட்பத்துக்கான அணுகல், ஆதாரவளங்கள் கிடைக்கப் பெறுதல், இணைய செயற்பாடுகளுடன் பரிச்சயம் மற்றும் கல்வி கற்றலுக்கான ஆதரவு முதலியவை இதில் உள்ளடங்கும். கல்வி கற்போர் அனைவருக்கும் ஆதரவளிப்பதுடன் ஜூன் மாதத்தில் வழங்கப்படும் ஆண்டிறுதி அறிக்கையை நோக்கிய ஒன்ராறியோ பாடத்திட்டத்துடன் தொடர்புடைய அர்த்தமுள்ள கல்வி கற்கும் சந்தர்ப்பங்களை வழங்கும் அதே நேரத்தில் இந்த சவால்களை ஆசிரியர்கள் நினைவில் வைத்திருப்பார்கள்.

மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் நியாயமானதாகவும், வெளிப்படையானதாகவும் அனைத்து மாணவர்களுக்கும் சமத்துவமாகவும் இருக்கவேண்டும் என்பதும் கல்வி கற்றல் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் கவனம் செலுத்தவேண்டும் என்பதும் எங்களுடைய உறுதிப்பாடாகும். வழமைபோல, உங்களிடம் ஏதாவது கேள்விகள் அல்லது கரிசனைகள் இருந்தால், தயவுசெய்து உங்களுடைய பிள்ளையின் ஆசிரியர் மற்றும்/அல்லது நிவாகத்தினருடன் தொடர்புகொள்ளுங்கள். மேலதிக தகவல்களுக்கும் ஆரம்பநிலை மற்றும் இரண்டாம் நிலை மாணவர்களுக்கான மதிப்பீடு மற்றும் அறிக்கையிடுதல் பற்றிய குறிப்பிட்ட விபரங்களுக்கும் தயவுசெய்து பெற்றோர்/குடும்பத்தவர்களுக்கான மதிப்பீடுச் செய்தித்தாளை வாசியுங்கள்.

## பட்டமளிப்பு விழாக்கள், ஆண்டிறுதி நிகழ்வுகள் மற்றும் ஏனைய நிகழ்வுகள்

ஏப்ரல் 14 ஆம் திகதி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு, அனைத்துக் களப் பயணங்களும் இரவு தங்கியிருக்கும் பயணங்களும் மீதமாக இருக்கும் பாடசாலை ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. பாடசாலை ஆண்டிறுதி நிகழ்வுகள், பட்டமளிப்பு விழாக்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் இந்த வருடம் இடம்பெறுமென்ற எதிர்பார்ப்புடன் இருந்தோம். ஆனால், குறைந்தபட்சம் மே மாதம் 31 ஆம் திகதிவரை பாடசாலைகள் மூடப்படவேண்டியிருக்கும் என்ற அண்மைய செய்திப்படி, இது சாத்தியமாகாது. இந்த நிகழ்ச்சிகளை நாங்கள் இரத்துச்செய்வது அல்லது பாடசாலை ஆண்டு இறுதிவரைக்கும் பிற்போடவேண்டியிருப்பது கவலைக்குரியதே. அறியப்படாத பல விடயங்கள் இன்னும் இருப்பதால், பிற்போடப்பட்ட

நிகழ்ச்சிகளை மீள் அட்டவணைப்படுத்தல் பாடசாலை மட்டத்தில் உள்ளூர் சூழ்நிலைகளுக்கேற்ப கையாளப்படும். பட்டமளிப்பு விழாக்களின்போது வழமையாகக் கொடுக்கப்படும் புலமைப் பரிசில்கள் பிந்திய ஒரு திகதியில் இடம்பெற இருக்கும் நிகழ்வில் முறையான அங்கீகாரத்துடன் தொடர்ந்து வழங்கப்படலாம் என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

## நீங்கள் கூற விரும்புவதைக் கேட்டறிதல்

தொலைதூரக் கல்வியின் முதல் மாத முடிவுக்கு வரும் இந்த நேரத்தில் உங்களிடமிருந்து கேட்டறிந்துகொள்ள விரும்புகின்றோம். எது நன்றாகச் செயற்பட்டது? எது நன்றாக இருக்கவில்லை? உங்களுடைய ஆலோசனைகள் யாவை? தொலைதூரக் கல்வியில் உங்களுடைய பிள்ளையின் அனுபவம் பற்றிய உங்களுடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்குத் தயவுசெய்து ஒரு சில நிமிடங்கள் எடுங்கள். எங்களுடைய மாணவர்களினதும் குடும்பத்தினரதும் தேவைகளை நாங்கள் நன்கு புரிந்துகொள்ள முயற்சிப்பதால், உங்களுடைய அபிப்பராயம் முக்கியமானது. இந்தக் கலந்துரையாடலில் உங்களுடைய கருத்தைக் கூறுவதற்கு இந்த சிந்தனைப் பரிமாற்றத்தில் (ThoughtExchange) எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள்

## கோடைகால கல்வி கற்கை சந்தர்ப்பங்கள்

இந்தக் கோடைகாலம் முழுவதும் கல்வி கற்றலைத் தொடர்வதற்கு அனுமதி வழங்குவதற்காகப் பல தெரிவுகள் ஆராயப்பட்டு வருகின்றன. மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து கீழே பார்வையிடுங்கள். அத்துடன், எதிர்வரும் வாரங்களில் மேலும் விவரங்கள் வழங்கப்படும்.

### கலப்பு ஆரம்பநிலை கோடைகாலப் பாடசாலை தொலைதூரக் கல்வி கற்றல்

மாணவர்களின் கல்வி கற்றல் இடைவெளிகளுக்கான தீர்வுகாணலுக்கும், ஜூலை மாதம் முழுவதும் மாணவர்களை ஈடுபடுத்திக்கொள்வதற்குமான தொலைதூர ஆரம்பநிலை கோடைகால பாடசாலைகளுக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்வரும் வாரங்களில் ஆரம்பநிலை கோடைகாலப் பாடசாலை இணைய பக்கத்தில் (elementary summer school web page) மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெறும்.

*குறிப்பு: கல்வி அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய இணைய தளம் மூலம் மற்றும் வகுப்பறையில் கல்வி கற்கும் சூழல்களை இந்தத் திட்டம் உள்ளடக்கூடும் என்பதால், இது 'கலப்பு' என அழைக்கப்படுகின்றது.*

**தொலைதூர கோடைகால மதிப்பெண் மீட்சி (இரண்டாம் நிலை)**

TDSBஇன் இரண்டாம் நிலை மாணவர்களுக்கு ஜூலை 6 - 31 வரை தொடர் கல்விப் பிரிவு தொலைதூர மதிப்பெண் மீட்சித் திட்டம் ஒன்றை முன்வைக்கும். இந்தத் திட்டம் 2020 ஆண்டு நேருக்கு நேரான கோடைகாலப் பாடசாலையை மாற்றீடு செய்யும், அத்துடன் கட்டாய பாடங்களில் கவனம் செலுத்துவதுடன் தரம் 9 முதல் 12 வரையான அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கும். மேலும் தகவல்களுக்கு எதிர்வரும் வாரங்களில் கோடைகாலப் பாடசாலை இணைய பக்கத்திற்கு வருகை தாருங்கள்.

**கலப்பு தொலைதூர கோடைகால மதிப்பெண் திட்டம் (இரண்டாம் நிலை)**

TDSBஇன் இரண்டாம் நிலை மாணவர்களுக்கு ஜூலை 6 – 31வரை தொடர் கல்விப் பிரிவு தொலைதூர கோடைகால மதிப்பெண் திட்டம் ஒன்றை முன்வைக்கும். இந்தத் திட்டம் 2020 ஆண்டு நேருக்கு நேரான கோடைகால பாடசாலையை மாற்றீடு செய்யும், அத்துடன் கட்டாய பாடங்களில் கவனம் செலுத்துவதுடன் தரம் 9 முதல் 12 வரையான அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கும். மேலும் தவல்களுக்கு எதிர்வரும் வாரங்களில் கோடைகாலப் பாடசால இணைய பக்கத்திற்கு வருகை தாருங்கள்.

*குறிப்பு: கல்வி அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய இணைய தளம் மூலம் மற்றும் வகுப்பறையில் கல்வி கற்கும் சூழல்களை இந்தத் திட்டம் உள்ளடக்கூடும் என்பதால், இது 'கலப்பு' என அழைக்கப்படுகின்றது.*

**e-கோடைகால திட்டம்**

e-கோடைகால திட்டம், கடந்த வருடங்களைப்போல ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் தொடரும், அத்துடன் TDSB மாணவர்களுக்கான பாடங்களுக்குரிய பதிவு ஏப்ரல் மாத முற்பகுதியில் ஆரம்பித்தது. பாடங்கள் அனைத்தும் முழு-மதிப்பெண்ணுக்குரியவை, அத்துடன் தரம் 11 மற்றும் தரம் 12 பாடங்களையும் தரம் 10 குடியியல் மற்றும் தொழில் கல்வியையும் உள்ளடக்கும். TDSB அல்லாத மாணவர்கள் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் பாடங்களுக்கு ஜூன் மாதத்தில் பதிவு செய்யலாம். இந்தப் பாடங்கள் பற்றிய முழுத் தகவல்கள் மற்றும் பதிவு செயல்முறை e-கல்வி கற்கை இணைய தளத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

**விசேட கல்விக்கான தொலைதூர கோடைகாலப் பாடசாலை**

விசேட கல்வி மாணவர்களுக்கான கோடைகாலத் தொலைதூரப் பாடசாலை தொடர்ந்து

இயங்கும். இரண்டாம் நிலை DHH மாணவர்கள் அவர்களது இரண்டாம் நிலை மதிப்பெண்ணுக்குரிய பாடங்களை அணுகக் கூடியதாக இருக்கும். தரம் 1 - 8 இல் உள்ள மாணவர்களுக்கும் நாங்கள் DHH கோடைகாலப் பாடசாலையை வழங்குவோம். மாணவர்கள் கோடைகால மதிப்பெண்களை அணுகும்பொருட்டு இரண்டாம் நிலை CTCC கோடைகால பாடசாலையும் தொடர்ந்து இயங்கும்.

தரம் 1 முதல் 12 வரையிலான வளர்ச்சிக் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கும் கோடைகாலப் பாடசாலை இயங்கும். ஏற்கனவே நடைபெறும் தொலைதூரக் கல்வி கற்பித்தலை ஆசிரியர்கள் தொடர்வதுடன் மேலும் கல்வி கற்கும் சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் தொடர்ந்து வழங்குவார்கள்.

## விசேட தொலைதூர கல்வி IPRC/SEPRC/IEP

விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களுக்கு இந்த அமைச்சு அவர்களுடைய அண்மைய விசேட கல்வித் தேவைகள் மற்றும் மனநல ஆதரவுகள் தேவைப்படும் மாணவர்களுக்கான தொடர்ச்சியான கல்வி கற்றல் என்ற குறிப்பில் மேலதிக வழிகாட்டலை வழங்கியுள்ளது.

முன்னொருபோதும் ஏற்படாத தற்போதைய தொலைதூரச் சூழ்நிலைகள் காரணமாக, அமைப்பின் அவசரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிபடுத்துவதற்காக IPRC க்கள் மற்றும் SEPRC க்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

**முன்னுரிமை IPRC க்கள் மற்றும் SEPRC க்கள்:**

- கற்றல் குறைபாடுகள் கண்டறியும் பாலர் வகுப்பிலிருந்து (DK) விலகும்வெளியேறும் சிரேஷ்ட பாலர் வகுப்பு மாணவர்கள்;
- ISP கருத்திலெடுக்கப்படும் பாலர் வகுப்பு இடையீடு திட்டத்திலிருந்து (KIP) விலகும் அனைத்து மாணவர்கள்;
- ஒரு பாடசாலையிலிருந்து மற்றொரு பாடசாலைக்கு அவர்கள் நகர்ந்து கொண்டிருப்பதால் ஒரு மாற்று நிலை தேவைப்படும் விசேட கல்வி தீவிர ஆதரவுத் திட்டத்தில் (ISP) மாணவர்களுக்கான நிலை 2 வருடாந்த IPRC மீள் பரிசீலனை;
- கடுமையான சிக்கலான மருத்துவத் தேவைகள் உள்ள மாணவர்களுக்கு மட்டும் SEPRC ஐ கருத்திலெடுத்தல்;
- CTCC திட்டங்களிலிருந்து திரும்பும் மாணவர்கள்;

- தரம் 4 உயர் திறன் (Gifted) ISP க்காக (பதிவுசெய்யப்பட்ட TDSB மாணவர்கள் மாத்திரம்; இந்த வகைக்கு SEPRC இல்லை) கருத்திற்கொள்ளப்படும் தரம் 3 மாணவர்கள்;

IPRC க்கள் தொலைதூரத்தில் Webex அல்லது தொலைத்தொடர்பு கருத்தரங்கு ஊடாக நடாத்தப்படும். மாணவருடைய இரகசியத்தன்மையை உள்ளடக்கும் ஏதாவது ஆவணத்துடன் பெற்றோர்/பாதுகாவலருக்கு அனுப்பவேண்டிய மின்னஞ்சலுக்கு, அந்தத் தகவல்கள் மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்படுவதற்கு பெற்றோர்/பாதுகாவலருடைய முன்கூட்டிய ஒப்புதல் தேவைப்படும். தகவல் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் தனியுரிமை மீறலைத் தவிர்க்கவும் மாணவருடைய தனிப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் மின்னஞ்சல் தகவல் குறியாக்கம் செய்யப்பட்டு கடவுச்சொல் மூலம் பாதுகாக்கப்படும். இந்த மின்னஞ்சலின் விடயத் தலைப்பில், 'இரகசியமானது' என்ற சொற்பதம் உள்ளடக்கப்படுவதுடன் பெற்றோர்/பாதுகாவலர் மின்னஞ்சல் கிடைக்கப்பெற்றதை உறுதி செய்வதற்காக வாசிப்பு ஒப்புதல் ஒன்றும் உள்ளடக்கப்படும்.

## பிரெஞ்சு ஒரு இரண்டாம் மொழியாக (FSL), குடும்பங்களுக்கு ஆதாரவளங்கள்

இந்த வாரம் FSL பிரிவு, பிரெஞ்சு ஒரு இரண்டாம் மொழி என்ற செயற்திட்டங்களிலுள்ள மாணவர்களுடைய பெற்றோர், பாதுகாவலர் மற்றும் குடும்பத்தினருக்காக FSL குடும்பங்களுக்கான ஆதார வளங்கள் கூகுள் தளம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இந்தத் தளம், வழிகாட்டும் கோட்பாடுகள், FSL திட்டங்களில் தொலைதூரக் கல்வி கற்றலுக்கான நோக்குகள், ஆதாரவளங்களுக்கான இணைய இணைப்புகள், வீட்டில் எவ்வாறு ஆதரவு வழங்குவது என்பவற்றுடன் மற்றும் பலவற்றை உள்ளடக்கி மாணவர்களுக்கு தொலைதூரக் கல்வி கற்கையின் போது எவ்வாறு ஆதரவு வழங்கலாம் என்பது பற்றிய தகவல்களை வழங்குகின்றது.

## கல்வி அமைச்சு மற்றும் ரொறன்ரோ பொது சுகாதாரப் பிரிவின் சமீபத்திய தகவல்கள்

குறைந்த பட்சம் மே 31, 2020 வரை பாடசாலைகளை மூடுதல் நீடிக்கப்படும் என்ற இந்த வார அறிவிப்புடன், கல்வி அமைச்சும் ரொறன்ரோ பொதுச் சுகாதார பிரிவும் பெற்றோர்/குடும்பத்தினருக்கு இந்த வாரம் கடிதங்களை அனுப்பியுள்ளனர். அந்த சமீபத்திய தகவல்களைத் தயவுசெய்து இங்கே வாசிக்கவும்: கல்வி அமைச்சின் கடிதம் மற்றும் ரொறன்ரோ பொதுச் சுகாதாரப் பிரிவின் கடிதம்.

Toronto District School Board

## நிறைவுரை

கல்வி கற்றல் தொடர்வதற்கு ஆதரவளிக்கும் பொருட்டு நீங்கள் செய்யும் யாவற்றுக்கும் மீண்டும் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். முன்னொருபோதும் இல்லாதவாறு இப்போது வீட்டுக்கும் பாடசாலைக்குமிடையேயான வலுவான பங்காற்றல் முக்கியமானது. உங்கள் பிள்ளை (பிள்ளைகளை) ஈடுபடுத்துவதற்கும் படசாலையுடனும் உங்களுடைய ஆசிரியர்களுடனும் தொடர்புடன் இருக்கச் செய்வதற்காக நீங்கள் எதைச் செய்தாலும் அது முக்கியாமான சாதகமான தாக்கம் ஒன்றை ஏற்படுத்தும். இந்த சூழ்நிலைகளில் நாங்கள் அனைவரும் எங்களால் இயன்றவரை சிறப்பாகச் செயற்படுவதுடன் உங்களுடைய முயற்சிகளை நாங்கள் மிகவும் பாராட்டுகின்றோம்.

எங்களுடைய மாணவர்கள் பற்றிக் குறிப்பிட விரும்புவதுடன் அவர்களுடைய கடின உழைப்பையும் இந்த மாற்றத்தினூடே அவர்களுடைய உறுதியையும் நான் அங்கீகரிக்கின்றேன். தொலைதூரக் கல்வி கற்றலுக்கான நிலைமாற்றம் ஒவ்வொருவருக்கும் ஒரு அனுசரிப்பாகவும், மாணவர்களுக்கு அவர்கள் பழக்கப்பட்ட முறையிலிருந்து மிகவும் வித்தியாசமானதொரு கற்கும் முறையாகவும் இருக்கின்றது. தக்க தருணத்தில் நிலைமையைச் சமாளிப்பதற்காக மாணவர்கள் கடின முயற்சி எடுப்பது பற்றியும் நம்பமுடியாத அளவுக்கு அர்ப்பணிப்பையும் படைப்பாற்றலையும் காட்டுவது பற்றியும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து அற்புதமான கதைகளை நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். TDSB முழுவதிலும் எங்களுக்கு அற்புதமான மாணவர்களும் குடும்பத்தினரும் உள்ளனர் என்பதற்கு இது ஒரு சான்றாகும். நான் ஒவ்வொருவர் குறித்தும் மிகவும் பெருமையடைவதுடன் நாங்கள் இணைந்து செயற்படும்போது இந்தக் கடினமான காலத்தைக் கடந்துவிடுவோம் என்பதை நான் அறிவேன்.

கடைசியாகப் பாடசாலைக்கு திரும்புவது பற்றி நாங்கள் ஏற்கனவே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் முடியுமானவரை சிறப்பாகத் திட்டமிடுகின்றோம் என்பதையும் எளிமையுடன் மீண்டும் வலியுறுத்தவே நான் விரும்புகிறேன். அது எப்போது நடக்கும் என்று எங்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. அதேநேரத்தில் பொருத்தமான ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு அத்துடன் ஏனைய நடைமுறைகள் ஒழுங்காக இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் ரொறன்ரோ பொதுச் சுகாதாரப் பிரிவு மற்றும் கல்வி அமைச்சுடன் நெருங்கிய பங்களிப்புடன் பணியாற்றுவதே முக்கியமானதும் அவசியமானதுமாகும். மீண்டும், இது எல்லோருக்கும் ஒரு புதிய பரிச்சயமற்ற நிலையாகும், அத்துடன் பொதுச் சுகாதார அதிகாரிகளுடைய அத்தியாவசிய வழிகாட்டலுடனும்

பணியாளர்களினதும் ஏனையோரினதும் பெறுமதிமிக்க உள்ளீட்டுடனும் நாங்கள் இதற்காகப் பணியாற்றுவோம்.

தயவுசெய்து பாதுகாப்பாகவும் நலமுடனும் இருங்கள்.

உண்மையுள்ள,



John Malloy
Director of Education